**மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2013**

---

மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1978 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1981 இன் 66 ஆம் இலக்க மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் 10(4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாகிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(6) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2013 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 யூலை 24 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் மீளாய்வாண்டின் நிதியத்தின் செயற்படுநிலை தொடர்பான எனது அவதானிப்புக்கள் மாத்திரம் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

---

**2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாகத் தாபிக்கப்பட்ட இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் (SLIIT) மொத்த மூலதனமான ரூபா 373,500,000 தொகை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் ஈடுபடுத்தப்பட்டமை, அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்கள் அரசாங்க நிறுவனங்களின் தலைவர்களாக செயற்படுகின்றமை மற்றும் அதன் நிதி மற்றும் செயற்பாடுகளின் செயற்படுநிலைக்காக நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் முன்னிற்றல் போன்ற விடயங்களின் அடிப்படையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களுடன் அந்த நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களும் ஒன்றிணைக்கப்பட வேண்டிய போதிலும், முதலாவது தடவையாக 2012 இன் கணக்காண்டிற்காக நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 2.2 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் இருப்பு

நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் இறுதியாக தயாரிக்கப்பட்ட 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பாக விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| நிதிக்கூற்றுக்களின் விடயம் | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| **சொத்துக்கள்** | |
| நடைமுறையல்லாச் சொத்தக்கள் | 10,394,883,490 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 4,348,718,920 |
| மொத்த சொத்துக்கள் | 14,743,602,410 |
| **பொறுப்புக்கள்** | |
| நடைமுறைப் பொறுப்புகள் | 4,968,870,590 |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | 33,240,119 |
| மொத்த பொறுப்புக்கள் | 5,002,110,709 |
| தேறிய சொத்துக்கள்/விடயம் | 9,741,491,701 |
| | 14,743,602,410 |
| மொத்த வருமானம் | 2,749,622,769 |
| மொத்தச் செலவினம் | 1,925,706,140 |
| மிகை | 823,916,629 |

## 2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள உறுதிப்படுத்தல்கள் மற்றும் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| (i) | முதலீடு | 5,860,541,686 | நிலையான வைப்புச் சான்றிதழ் அல்லது உறுதிப்படுத்தும் ஏனைய ஆவணங்கள் |
| (ii) | முன்னுரிமைப் பங்குகளில் முதலீடு | 200,000,000 | பங்குச் சான்றிதழ் அல்லது உறுதிப்படுத்தும் ஏனைய ஆவணங்கள் |
| (iii) | அபிவிருத்தி லொத்தர் சபையில் முதலீடு | 2,200,000 | பங்குச் சான்றிதழ் அல்லது உறுதிப்படுத்தும் ஏனைய ஆவணங்கள் |
| (iv) | மஹபொல மங்கத லொத்தர் | - | வரப்பிரசாதங்களை வெளியிடும் கடிதம் |

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் 3 மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வுக்கு குழு கூட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது அந்தக் குழுக் கூட்டத்தை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 போதியளவான அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல், வாங்கல்கள்

2005 ஆம் ஆண்டின் போது நடைபெற்ற 46 ஆவது நம்பிக்கைப் பொறுப்பு சபைக் கூட்டத்தின்போது, நம்பிக்கைப் பொறுப்புச் சபை தீர்மான இலக்கம் 45/02 இன் பிரகாரம் பாடசாலை அபிவிருத்தி நிதியம் உருவாக்கப்பட்டிருந்ததுடன் நம்பிக்கைப் பொறுப்பு சபையின் அங்கீகாரமின்றி 2013 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 573,722,672 தொகையான நிதியத்தின் மீதியில் ரூபா 252,722,672 தொகை வருமானக் கணக்கில் பதிவழிக்கப்பட்டிருந்தது. பாடசாலை அபிவிருத்தி நிதியத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட 2011 யூன் 22 ஆந் திகதி வரையில் அபிவிருத்தி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 5 பாடசாலைகளுக்குரிய ஒதுக்கீடுகளில் சேமிக்கப்பட்டிருந்த ரூபா 1,659,546 தொகை வருமானத்திற்கு எடுக்கப்படாமல் ஒதுக்கீடாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றல்

1981 இன் 66 ஆம் இலக்க மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நோக்கங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

- ❖ இளைஞர்களுக்கு உயர் கல்வி வசதிகளை வழங்குதல்.
- ❖ திருப்திகரமானதாக தமது இரண்டாம் கல்வியை பூரணப்படுத்துவதற்கு இருக்கின்ற நிதி உதவிகளைப் பெறுவதற்கு தகைமைபெற்ற இளைஞர்களுக்கு தமது கலைசார்ந்த கைத்தொழில் அல்லது தொழில்நுட்பக் கல்வியை சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பல்கலைக்கழகமொன்றில் அல்லது கைத்தொழில் தொடர்பான உயர் கல்வி நிறுவனமொன்றில் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அவர்களுக்கு நிதியுதவியை வழங்குதல்.
- ❖ இளைஞர்களுக்கு தங்களின் தொழில்ரீதியான திறன் மற்றும் இயலுமைகளை அதிகரித்துக் கொள்ளக்கூடிய வகையில் தொழில்ரீதியான பயிற்சி நிறுவனங்களை தாபித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் அல்லது தாபிப்பதற்கும் முகாமைத்துவம் செய்வதற்கும் உதவியாக இருத்தல்.
- ❖ கல்வி வழங்கலில் நிரந்தரமாக ஈடுபடக்கூடிய கல்லூரிகள் நிறுவனங்கள் மன்றங்கள் மற்றும் ஏனைய அவ்வாறான நிறுவனங்களைத் தாபித்தலும் அவற்றை முகாமைத்துவம் செய்தலும் மற்றும் பராமரித்துச் செல்வது தொடர்பில் உதவுதல்.
- ❖ கல்விசார் செயற்பாடுகளில் நிரந்தரமாக ஈடுபட்டிருக்கின்ற விரிவுரையாளர்களினதும், ஆசிரியர்களினதும் மற்றும் அவ்வாறான ஏனைய நபர்களினதும் திறன்கள் மற்றும் இயலுமைகளைக் கட்டியெழுப்புதல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக நிதியுதவிகளை வழங்குதல்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கு உரிய மாணவர்களினால் பெறப்படாத மஹபொல புலமைப்பரிசில் தவணைப் பணங்களின் கூட்டுத்தொகை ரூபா 19,079,800 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 7,194,600 தொகை 5 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாகவும், ரூபா 89,900 தொகை 9 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாகவும் நிறுத்தி வைக்கப்பட்டு மீண்டும் நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. செலுத்தப்படாத புலமைப்பரிசில் தவணைப்பணத்தை தாமதமின்றி மீளப்பெற்றுக் கொள்வதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்று நிதியத்தால் பின்பற்றப்படாமையினால் அந்தப் பணத்தை ஆக்கபூர்வமான முதலீடொன்றில் ஈடுபடுத்தி பெறக்கூடியதாக இருந்த நலன்களைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தை நிதியம் இழந்திருந்தது.

(ஆ) அரசாங்கப் பாடசாலைகளில் கட்டமைப்பு ரீதியான அபிவிருத்தி மற்றும் நிர்மாணங்களுக்காக மூலதனச் செலவினங்களைச் செய்யும் நோக்கத்துடன் தாபிக்கப்பட்ட பாடசாலை அபிவிருத்தி நிதியத்திலிருந்து அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பாடசாலைகளைத் தெரிவு செய்யும் முறையான திட்டமொன்றும் மற்றும் நெறிமுறைகளும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2005 ஆம் ஆண்டிலிருந்து பாடசாலை அபிவிருத்தி நிதியத்திலிருந்து ரூபா 221,000,000 தொகை முதலீடு செய்யப்பட்டு அதன் மூலம் உழைக்கப்பட்ட ரூபா 664,834,326 தொகையான வட்டி வருமானத்தில் 32 பாடசாலைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 302,395,007 தொகை அதாவது 45.5 சதவீதம் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

## 3.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் 5(ஏ)(1) ஆம் நிபந்தனையின் பிரகாரம், தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையின் கீழ் வழங்கப்பட்டிருந்த நிலத்திற்கான வாடகையாக அந்த நிறுவனத்தின் வருடாந்த தேறிய இலாபத்தில் 20 சதவீதம் அல்லது ரூபா 8,000,000 என்ற பெறுமதியில் கூடிய தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் 2006 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 202,626,450 ஆக இருந்த போதிலும், ரூபா 120,290,945 தொகையே அறவிடப்பட்டிருந்தமையால் நிலுவை வாடகையான ரூபா 82,335,505 இனை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ஆ) கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்திற்குச் சொந்தமான கட்டிடமொன்றில் 6 ஆவது மாடியில் மஹபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் அலுவலகம் நடாத்திச் செல்லப்பட்டதுடன் உடன்படிக்கை மற்றும் மதிப்பீட்டு அறிக்கை என்பன இன்றி மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த வாடகை ரூபா 3,742,777 ஆக இருந்ததுடன் உடன்படிக்கையின்றி கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்திலிருந்து பெறப்பட்ட சுத்திகரிப்பு சேவைகளுக்காக ரூபா 288,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நோக்கமொன்றல்லாத உயர் தர கல்வி பயிலுகின்ற மாணவர்களுக்காக புலமைப்பரிசில் வழங்குவதற்காக மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் முறையே ரூபா 53,704,200 மற்றும் ரூபா 49,485,000 தொகைகள் செலவிடப்பட்டிருந்தன.

## 3.4 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது குருணாகல் மாவட்டத்தில் 3 பாடசாலைகளுக்கும் காலி மாவட்டத்தில் ஒரு பாடசாலைக்கும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக பாடசாலை அபிவிருத்தி நிதியத்திலிருந்து ரூபா 68,389,507 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அதில் மூன்று செயற்திட்டங்களுக்கு நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. அவ்வாறே இந்த செயற்திட்டங்களின் ஒப்பந்தங்களைக் கையளிக்கும் போது பின்வரும் பொதுவான குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.4 ஆம் பிரிவின் பிரகாரம் செலுத்தக்கூடிய ஆகக்கூடிய வேலை ஆரம்பிப்பு முற்பணம் ஒப்பந்தப் பெறுமதியில் 20 சதவீதமாக இருந்த போதிலும் மேற்கூறப்பட்ட செயற்திட்டங்களில் ரூபா 46,851,200 தொகையான ஒப்பந்தப் பெறுமதியில் 33 சதவீதம் முதல் 50 சதவீதம் வரையிலான வீச்சில் முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 3 செயற்திட்டங்களின் உடன்படிக்கைகள், பெறுகைகள் வழிகாட்டிக்கு புறம்பாக கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்திற்கு (சதொச) வழங்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னர் நம்பிக்கைப் பொறுப்பு சபையின் அங்கீகாரமின்றி தாபனத்தினால் அந்த ஒப்பந்தம் உப ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(iii) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.8 ஆம் பிரிவின் பிரகாரம் 2 செயற்திட்டங்களுக்குரிய செயலாற்றல் காப்பீடு பெறப்படாதிருந்ததுடன் 5.4.6 ஆம் பிரிவின் பிரகாரம் 2 செயற்திட்டங்களுக்குரிய ஒப்பந்தகாரருக்கு கொடுப்பனவு செய்யும் போது நிறுத்தி வைத்தல் பணம் கழிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) இந்த செயற்திட்டங்களின் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலம் மற்றும் அறவிட வேண்டிய தாமதக் கட்டணம் தொடர்பாக உடன்படிக்கைகளில் நிதிஏற்பாடுகள் வழங்கப்படாதிருந்தமையால் தாமதமாகும் காலத்திற்காக தாமதக் கட்டணம் அறவிடுவதற்கிருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) மேற்கூறப்பட்ட செயற்திட்டங்களின் நிர்மாணங்களுக்குரியதாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) குருணாகல் சாந்த ஆனா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானம் மற்றும் நீச்சல் தடாகம் என்பவற்றை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 32,500,000 ஆக இருந்ததுடன் உள்ளபடியான செலவினம் ரூபா 64,287,501 ஆக இருந்தது. இதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கிரய அறிக்கையொன்றோ அல்லது அளவிடைப் பத்திரமொன்றோ காணப்படாதிருந்ததுடன் உள்ளபடியான செலவின மதிப்பீட்டுத் தொகையைப் போல இரண்டு மடங்கை விட அதிகரித்தமைக்கான காரணம் ஆய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. கிரிகெட் விளையாட்டிற்காக ஆடுகளத்தை நிர்மாணித்தல் விளையாட்டு மைதானத்தை அமைத்தல் மற்றும் நீச்சல் தடாகத்தை நிர்மாணித்தல் என இனங்காணப்பட்ட 03 செயற்திட்டங்களுக்காக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் மேலும் அதவானிக்கப்பட்டன.

- செயற்திட்டத்திற்காக ஒப்பந்தகாரர், வழங்குனர் மற்றும் மதியுரையாளர் என்போரைத் தெரிவு செய்வதற்காக பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.7 மற்றும் 2.8 ஆம் பிரிவின் பிரகாரம் பெறுகைகள் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு என்பன நியமிக்கப்பட்டிருக்கவில்லை. பெறுகைகள் நடைமுறைகளுக்குப் புறம்பாக மதியுரையாளராகச் சேர்க்கப்பட்டிருந்த நபரின் தகைமைகள் மற்றும் சேவை அனுபவம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- நிர்மாண மதியுரையாளர், நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துடன் 2012 மார்ச் 01 ஆந் திகதி ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் மதியுரையாளர் படியாக செயற்திட்டக் கிரயத்தில் 4 சதவீதம் என்ற ஆகக்கூடியதன் கீழ் மாதாந்தம் ரூபா 100,000 வீதம் செலுத்த வேண்டிய தொகை ரூபா 813,193 ஆகும். எவ்வாறாயினும் ரூபா 2,312,000 செலுத்தப்பட்டமையினால் ரூபா 1,498,807 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

- பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.4(இ) பிரிவின் பிரகாரம் கேள்வி கோரல் பதிவேட்டைத் தயாரிப்பதற்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்ட மதியுரையாளருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட முடியாதிருந்த போதிலும், இந்த ஒப்பந்தத்தின் அளவிடைப் பத்திரம் தயாரித்திருந்த மதியுரையாளருக்கு நம்பிக்கைப் பொறுப்புச் சபையினால் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

- உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்ட மதியுரையாளரினால் மூலப்பொருள் கட்டளையிடல், மூலப்பொருட்களின் தரம், அளவு மற்றும் விலைகள் தீர்மானித்தல் மேற்கொள்ளப்பட வேண்டியமை குறிப்பிடப்பட்டிருந்தமையினால் மதியுரையாளர் சேவையின் பணிகள் சரியாக இனங்காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- விளையாட்டு மைதானத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட வேலைத்தள முகாமையாளருக்கு நம்பிக்கைப் பொறுப்பு சபையின் அங்கீகாரமின்றி மாதத்திற்கு ரூபா 20,000 வீதம் ரூபா 233,333 படியொன்று செலுத்தப்பட்டிருந்தது.

- இந்த நிர்மாணங்கள் ''ஒன்றிணைக்கப்பட்ட பாரியளவிலான ஒப்பந்தம்'' என்ற விஷேட திட்டத்தில் மேற்கொள்வதற்கு நம்பிக்கைப் பொறுப்பு சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தக்காரரைத் தெரிவு செய்வதற்காக பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.10 மற்றும் 3.11 ஆம் பிரிவுகளின் பிரகாரம் இரண்டாம் கட்ட கேள்வித் திட்டமோ அல்லது இரண்டாம் உறையிடப்பட்ட முறைமையோ பின்பற்றப்பட்டிருக்கவில்லை. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களிடமிருந்து முன்னர் காணப்பட்ட தகைமைகள் பரீட்சிக்கப்படாமல் ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தத்திற்காக முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

- குழாய்க் கிணறுகள் நிர்மாணிக்கும் ஒப்பந்தம் பெறுகைகள் நடைமுறைகளுக்கும் புறம்பாக தனியார் நிறுவனமொன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் நிர்மாணத்திற்காக நம்பிக்கைப் பொறுப்பு சபையின் அங்கீகாரமின்றி ரூபா 824,127 தொகை செலவிடப்பட்டிருந்தது.

- 53/08 ஆம் இலக்கநம்பிக்கைப் பொறுப்பு சபைத் தீர்மானத்தின் பிரகாரம் பெறுகைகள் நடைமுறைகளுக்கு புறம்பாக விளையாட்டு மைதானத்திற்கு நீரை வழங்கும் ஒப்பந்தம் ரூபா 3,468,640 தொகையில் தனியார் கம்பனியொன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(ii) குருணாகல் சேர் ஜோன் கொத்தலாவலக் கல்லூரியில் கேட்போர் கூடத்தின் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 19,000,000 ஆகவும் செலவிடப்பட்ட தொகை ரூபா 18,354,576 ஆகவும் இருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- பொறியியல் திணைக்களம் கட்டிடம் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலை வீதத்திற்குரியதாகக் கொண்டு மொத்தக்கிரய மதிப்பீடு தயாரிக்காதிருந்ததுடன் சில விடயங்களுக்காக ஒப்பந்தக்காரர்களின் கூறுவிலை முன்மாதிரியாகக் கொள்ளப்பட்டிருந்தது.

- அங்கீகரிக்கப்பட்ட அளவிடைப் பத்திரத்தின் பிரகாரம் மதிப்பீட்டுத் தொகை ரூபா 14,700,000 ஆக இருந்த போதிலும், உடன்படிக்கை செய்யும் போது கிரய மதிப்பீடு ரூபா 19,000,000 ஆக ரூபா 4,300,000 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

- ஒப்பந்த உடன்படிக்கையின் 07 ஆவது நிபந்தனையின் பிரகாரம் நிர்மாணங்கள் தொடர்பான செயல்முன்னேற்றம் மற்றும் அறிக்கைகள் முறையான உறுதிப்படுத்தலுடன் மாதாந்தம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு வழங்குவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும், 2014 மார்ச் 25 ஆந் திகதி வரையிலும் செலுத்தப்பட்ட ரூபா 13,000,000 தொகைக்காக வேலை உறுதிப்படுத்தல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- சிவிலீம் பழுதடைந்தமை, மின்சார முறையில் பழுது மற்றும் கதவுகள் சிலவற்றின் கண்ணாடிகள் உடைந்திருந்தமை போன்ற குறைபாடுகளை சரிசெய்து வழங்குவதற்கு உரிய ஒப்பந்தகாரர் 2015 யூலை 06 ஆந் திகதி வரையிலும் முன்வராமையினால் கேட்போர் கூடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு பொறுப்புக்கள் உறுதிப்படுத்தலுடன் அதிபருக்கு கையளிப்பதற்கு முடியாதிருந்தது.

(iii) காலி றிச்மண்ட் வித்தியாலத்தின் நீச்சல் தடாகத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட பொறியியலாளர் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 15,500,000 ஆக இருந்த போதிலும், உடன்படிக்கையில் கைச்சாத்திடும் போது அது ரூபா 20,000,000 ஆக ரூபா 4,500,000 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்துடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் 03 ஆம் பிரிவிற்கு முரணானதாக நிறைவேற்றப்பட்ட வேலைக்காக பொறியிலாளரின் சான்றிதழ் இன்றி ரூபா 20,192,302 கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

---

இலங்கை சனநாயக சோலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்படாதிருந்ததுடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் அல்லது கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | முதலீட்டு முகாமைத்துவம் | உரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமை மற்றும் பின்தொடர் நடவடிக்கையின்மை |
| (ஆ) | மஹபொல புலமைப்பரிசில் நிதிய முகாமைத்துவம் | செலுத்தப்படாத புலமைப்பரிசில் தவணைப் பணம் மீள அறவிடப்படாமை. |
| (இ) | ஒப்பந்த நிர்வாகம் | பெறுகைகள் நடைமுறை பின்பற்றப்படாமை |